* 215 Q.—Thiru L. GANESAN (on behalf of Thiru S. J. SADIQ PASHA), Thiru K. MEENAKSHISUNDARAM and Thiru A. P. SIVARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that Oil and Gas of high quality have been struck at Kovilkalappal, near Thanjavur ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இது மைய அரசு சம்பந்தப்பட்ட பொருளாகும். எனவே, இது சம்பந்தமாக மத்திய அரசு கீழ்க்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி நதிதீரத்தில் நாகப்பட்டினம் உப வடிநிலத்துக்கருகில் கோவில்களப்பால் என்னுமிடத்தில் எண்ணெயும் மற்றும் எரிவாயும் கிடைத்துள்ளது. சமீபத்தில், கோவில்களப்பால்-1, என்னுமிடத்தில் 1,765 மீட்டர் ஆழத்திற்கு ஒரு கிணறு தோண்டப்பட்டது. பரிசோதனையை நடத்தியபோது, நாளொன்றுக்கு 30.1 பாரல் வீதத்தில் எண்ணெயும் மற்றும் நாளொன்றுக்கு 21,993 எம். 3 எரிவாயும் கிடைத்தது.

(முற்பகல் 10-25)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இந்த எண்ணெய் கிடைத்திருப்பது தஞ்சை மாவட்டத்தில் கோவில்களப்பால் என்ற ஒரு இடத்தில்தானா என்று அறிய விரும்புகிறேன். நரிமணம் என்ற இடத்தில் கிடைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே வேறு எங்கெங்கே எண்ணெய் கிடைக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இது மத்திய அரசுக்குத் தொடர்புடைய பொருளாக இருந்தாலும், விவசாயத்திலே பாதிக்கப்பட்டிருக்கிற தஞ்சை மாவட்டத்திலே இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றைக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்து, அதைப் பெற்று, விரைவில் நிறைவேற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தஞ்சையிலே கோவில்களப்பால்-1, கோவில்களப்பால்-2 என்ற இடங்களிலே தற்போது கிணறு தோண்டப்பட்டிருக்கிறது. நரிமணம் பற்றி பத்திரிகையில் வந்திருக்கிறது. இதுபற்றி மத்திய அரசுக்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம். தற்போது

1986 ஏப்ரல் 28]

அங்கே கிடைக்கிற எண்ணெயை எடுத்துக்கொண்டு வந்து, சென்னையிலே இருக்கும் சுத்திகரிப்பு ஆலையிலே சுத்தம் பண்ணி, பரிசோதித்துக் கொண்டிருக்கிறார்கள். எரி வாயுவை என்ன செய்வது என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. அது பற்றிய முடிவுகளை மத்திய அரசு தெரிவிக்கவில்லை.

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்லாமல், சிதம்பரம், புவனகிரிக்கு அருகில் பூமிக்கு அடியிலேயும், கிள்ளைக்கு அருகிலே எம்.ஜி.ஆர் தீவு என்று வழங்கப்படும் இடத்திற்கு அருகிலே 25 கிலோ மீட்டர் தூரத்தில் வங்கக் கடலிலே பெட்ரோலியம் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது பற்றிய செய்தி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. காவிரிப் படுகையில் எண்ணெய் இருப்பதுபற்றி 20 வருடங்களுக்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி, இப்போதுதான் அதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். எனவே தென் ஆற்காடு மாவட்டத்தில் இருப்பது பற்றிக் கண்டு பிடிக்க இன்னும் நாளாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே எடுக்கப்படுகிற எண்ணெயை மணலி சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டுவந்து சுத்தம் செய்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அது சார்பான தொழிற்சாலையைத் தொடங்குவது தற்போது முடியாவிட்டாலும், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை தஞ்சையிலேயே ஆரம்பிக்க, மத்திய அரசின் மூலமாக அந்தப் பகுதியில் ஆரம்பிக்க, முயற்சி செய்யப்படுமா ? மத்திய அரசு அதை மறுத்தாலும், அதற்காக அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அந்த எண்ணம் தற்போது தமிழக அரசுக்கு இருக்கிறது. அதற்காக மத்திய அரசிடம் அணுகிக் கொண்டிருக்கிறோம்.

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் பற்றிய என்னுடைய துணை வினாவிற்கு 'தகவல் இல்லை' என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். புவனகிரிக்கு அருகில், பல லட்ச ரூபாய் செலவில் துரப்பணப் பணி செய்து, முன் ஏற்பாடாக பல ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, கட்டிடங்கள் கட்டுவதுகூட நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிய அந்தப் பகுதிக்கு வருகை தருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படி வேலை நடந்து கொண்டிருந்தால், கண்டிப்பாக அந்தப் பகுதிக்கு வரத் தயாராக இருக்கிறேன்.